## பதவி – வெற்றிடம்

### வடமேல் மாகாண சபை அரச சேவையில் ஆயர்வேத ஆணையாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்.

வடமேல் மாகாண சபை அரச சேவை ஆயர்வேத ஆணையாளர் பதவிக்காக நியமிப்பதற்கு, வடமேல் மாகாண பிரதம செயளாலரின் சிபாரிசு மற்றும் கௌரவ ஆளுநர் அவர்களது அங்கீகாரத்திற்கமைய தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் பணிபுரிகின்ற ஆயுர்வேத மருத்துவ சேவையில் நிர்வாகம் I ஆயுர்வேத மருத்துவ சேவையில் நிர்வாகம் II, ஆயர்வேத மருத்துவ சேவையில் வைத்திய உத்தியோகத்தர் 1 மற்றும் II ஆம் தரத்திலான உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது.

கவனத்தில் கொள்ளல்.

- கீழே காட்டப்பட்டு 1.1(அ) தகைமையுடைய உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்காதிருந்தால் மாத்திரம் 1.1(ஆ), 1.1(இ), 1.1(ஈ) மற்றும் 1.1(உ) தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகள் தொடர்பாக வரிசைப்படி கருத்தில் கொள்ளப்படுவார்கள்.

- தகுதிகளைப் பூர்த்தி செய்த ஒரே தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் குழு மட்டுமே ஒரே நேரத்தில் குறித்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், மேலும் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் திகதிக்கு குறித்த தரத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுவார்கள்.

01.1 தகைமைகள்.

I. (அ) ஆயர்வேத மருத்துவ சேவையில் நிர்வாகம் 1 ஆம் தர உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்,

அல்லது

(ஆ) ஆயர்வேத மருத்துவ சேவையில் நிர்வாகம் II ஆம் தரத்தில் 03 ஆண்டுகள் தொடர்ந்தும் மகிழ்ச்சிகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் 03 ஆண்டுகள் சம்பள உயர்வுகளை பெற்றிருத்தல்

அல்லது

(இ) ஆயர்வேத மருத்துவ சேவையில் நிர்வாகம் II ஆம் தரத்தில் 03 ஆண்டுகளுக்கு குறைவான சேவை காலம் உள்ள உத்தியோகத்தராக இருத்தல்.

அல்லது

(ஈ) ஆயர்வேத மருத்துவ சேவையில் வைத்திய உத்தியோகத்தர் 1 ஆம் தர உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(உ) ஆயர்வேத மருத்துவ சேவையில் வைத்திய உத்தியோகத்தர் II ஆம் தரத்தில் 08 ஆண்டுகள் தொடர்ந்து மகிழ்ச்சிகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் குறித்த காலத்தினுள் சம்பள உயர்வுகள் 08 டையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(மேலே 1.1.(ஆ), 1.1(இ), 1.1(ஈ) அல்லது 1.1(உ) தகைமைகளுடன் கீழுள்ள i மற்றும் ii தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்)

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் முதுகலை பட்டப் படிப்பு நிறுவனம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத ஆயர்வேத மருத்துவமனை முகாமைத்துவம் தொடர்பான முதுகலை பட்டம் பெற்றிருத்தல்.

மற்றும்

ii. முகாமைத்துவ திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி/ போதனா ஆயுர்வேத மருத்துவமனை, மாவட்ட ஆயர்வேத மருத்துவமனை ஒன்றில்/ கிராமீய ஆயுர்வேத மருத்துவமனை ஒன்றில் பணிப்பொறுப்பு உத்தியோகத்தர்/ வைத்திய அதிகாரியாக 03 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (ஆயர்வேத மருத்துவ சேவையில் நிர்வாகம் II ஆம் தரத்திற்கு அல்லது 1 ஆம் தரத்திற்கு உரிய பதவிக்கு முறையானவாறு நியமனம் அல்லது பதில் நியமனத்தில் பணியாற்றிய சேவைக் காலத்தையும் கருத்தில் கொள்ளப்படும்)

1.2 அரச சேவை ஆணைக்குழுவின் ஒழுங்கமைப்புகளுக்கு இணங்க ஒழுக்காற்று தண்டனை பெறப்படாமலிருத்தல்.

1.3. 2025.08.20 ஆந் திகதிக்கு சேர்த்துக்கொள்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

குறிப்பு: விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு இத் தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன், மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற அனைத்து சான்றிதழ்களினதும் மற்றும் தேசிய அடையாளட்டையில் தன்னால் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

*02. தேர்ந்தெடுக்கப்படும் முறை:*

வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களது அங்கீகாரத்துடன் வடமேல் மாகாண ஆளுநரது செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நடாத்தப்படுகின்ற நேரடி நேர்முகப்பரீட்சையில், பெற்றுக்கொள்ளப்படும் மதிப்பெண்களின் தகுதி வரிசையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

*03. விண்ணப்பப்படிவம் சமர்பித்தல்:*

அனைத்து விண்ணப்பப் படிவங்களையும் (மாதிரி படிவம் www.psc.nw.gov.lk என்ற இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்) நேர்த்தியாகவும் சரியாகவும் பூர்த்தி செய்து 2025.08.20 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு திணைக்களத் தலைவர் மற்றும் உரித்துடைய அமைச்சின் செயலாளர் ஊடாக (மாகாண சபைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவராயின் உங்களது விண்ணப்பப் படிவத்தை மாகாண அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதம செயலாளரின் சிபாரிசுடன் அனுப்ப வேண்டும்) **"ஆளுநரது செயலாளர், ஆளுநரது அலுவலகம், மாளிகை, குருணாகல்"** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இடுகின்ற கடித உறையின் இடது மேல் மூலையில் **"வடமேல் மாகாண சபை அரச சேவையில் ஆயர்வேத ஆணையாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்"** என்று குறிப்பிடப்பட வேண்டும். குறித்த திகதிக்கு பின் கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்கள், பூர்த்தியற்ற விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித்திகதிக்கு குறித்த தகைமை வழங்கப்படாத விண்ணப்பதாரிகளது விண்ணப்பப் படிவங்களை எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காலதாமதம் அல்லது காணாமல் போதல் தொடர்பான எந்தவொரு முறைபாடுகளையும் வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளாப்படமாட்டது.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக இங்கு குறிப்பிடப்படாத விடயங்கள் குறித்து முடிவுகளை எடுக்கும் அதிகாரம் வடமேல் மாகாண கௌரவ ஆளுநருக்கு உரியதாகும்.

Scanned with CamScanner

இந்த அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பதிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால் சிங்கள பதிப்பே மேலோங்கும்.

இப்பதவிக்காக சேர்த்துக் கொள்வது தொடர்பான இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண கௌரவ ஆளுநரிடமே உள்ளது.

இப்படிக்கு,

வடமேல் மாகாண கௌரவ ஆளுநரது கட்டளைப்படி,

ஆளுநரது செயலாளர்,
ஆளுநரது அலுவலகம்,
வடமேல் மாகாணம்.
2025.08. 04 .